

உ

ஸ்ரீ ஹரி

ஸ்ரீ கண்ணபிரான் துணை







# ஸ்ரீ ராதா ருக்மணி ஸமேத ஸ்ரீ கோகுலகிருஷ்ணன் திருக்கோயில்

## நெ.5 மெய்யூர் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

# அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிகை.

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார் படு துயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும் அருளொடு பெரு நிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் – நாராயணா என்னும் நாமம் – திருமங்கையாழ்வார்

அன்புடையீர்!

ஸ்ரீ பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் முதலான ஆழ்வார்கள் மற்றும் ஸ்ரீ ராமானுஜர் முதலான ஆச்சார்யர்கள் அவதரித்த பெருமையுடைது தமிழகத்தின் தொண்டை மண்டலம். அத்தகைய தொண்டை மண்டலத்தில் பாலாற்றங்கரையோரம் நீர்வளமும், நிலவளமும் நிறைந்ததும்,'மண்ணுலக ஆசைகளும் விண்ணுலக ஆசைகளும் கணப்பொழுதில் நல்கிடும்' மஹாமந்திரமான **'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே! ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே '** என்று நித்யம் அகண்டமாக மஹா மந்திர கீர்த்தனம் செய்யும் பரம பாகவதர்கள் நிறைந்து வாழும் மெய்யூர் கிராமத்தில் பக்தர்கள், பாகவதர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நித்யமாக நாம சங்கீர்த்தனம் செய்யும் வண்ணம், வேண்டுவோருக்கு வேண்டியதை தரும் கருணாமூர்த்தியான ஸ்ரீ ராதா ருக்மணி ஸமேத ஸ்ரீ கோகுலகிருஷ்ணன் ஸ்வாமிக்கு ஒரு நூதன கோயில் அமைக்க பகவத்திருவுள்ளம் பேரில் ஒரு கோயில் தற்போது பக்தர்களின் பூரண ஒத்துழைப்புடன் மிகவும் அழகுற நிர்மாணம் செய்யப்பட்டு உள்ளது விசுவாவசு வருஷம், பங்குனி மாதம் 11ம் **தேதி (25.3.2026) புதன்கிழமை** மிருகசீரிஷம் நட்சத்திரம், சப்தமி திதியும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் **காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்** ரிஷபலக்கனத்தில் எங்கள் குருநாதர் மஹாரண்யம் **ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் பரிபூரண** அருளாசிகள் மற்றும் முன்னிலையில் மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடைபெறவுள்ளது.மேலும் இந்த வைபவத்தில் ஒரு அங்கமாக மஹா மண்டபத்தின் வலது புறத்தில் ஸ்ரீ பிள்ளையார் மூர்த்தியும், இடது புறத்தில் ஸ்ரீ அனுமான் மூர்த்தியும் எழுந்தருளி பக்தர்களுக்கு பரிபூர்ண க்ருபையை வழங்கவுள்ளனர். இவ்வைபவத்தில் மஹா மந்திரம் கீர்த்தனம் செய்யும் பாகவதர்கள், பக்தர்கள், ஆன்மிக அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு குருக்ருபைக்கும், ஹரி க்ருபைக்கும் பாத்திரமாகும் படியும் கேட்டுக் கொள்கிறோம். மேலும் இவ்வைபவத்திற்கு தங்களால் இயன்ற பொருளுதவியும், நிதியுதவியும் தாராளமாக வழங்கி இறையருள் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு :
நெ.5 மெய்யூர் கிராமம் பொதுமக்கள்
ஆலைய நிர்வாக குழுவினர்.
மற்றும்
திருப்பணி குழுவினர்

# யாகசாலை நிகழ்ச்சி நிரல் :

| நாள் & நேரம் | நிகழ்ச்சிகளின் விவரம் |
|---|---|
| பங்குனி மாதம் 9ம் தேதி : 23.3.2026 திங்கள்கிழமை மாலை 5.00 மணியளவில் | அனுஜ்ஞை, ம்ருத்ஸங்க்ரஹம்,, அங்குராரோபணம், வாஸ்து சாந்தி, திவ்யப்ரபந்த, வேத வேதாந்த, இதிஹாஸ, புராணாதிகள், மஹா மந்திர கீர்த்தனம் தொடக்கம். |
| மாலை : 6.00 மணியளவில் | சிறுவர்கள் கலை நிகழ்ச்சி |
| பங்குனி மாதம் 10ம் தேதி : 24.3.2026 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் | யாகசாலை : முதல்காலம், ரக்ஷாபந்தனம், கும்பத்தில் பகவான் ஆவாஹனம், யாகசாலை ப்ரவேசம், முதல் கால ஹோமம், |
| மதியம் : 11.00 மணியளவில் | பூர்ணாஹுதி, சாற்றுமறை, |
| மதியம் : 4.00 மணியளவில் | அஷ்டபந்தன மருந்து சாற்றுதல் |
| இரவு : 8.00 மணியளவில் |  திருமதி. ஆ.புனிதவதிஅம்மையார் மகாபாரத சொற்பொழிவு நிகழ்ச்சி |
| பங்குனி மாதம் 11ம் தேதி : 25.3.2026 புதன் கிழமை காலை5.30 மணியளவில் | மூன்றாம் கால ஹோமம், யாத்ராவிதானம், கடஉத்தாபனம், |
| காலை 9.45 மணியளவில் | மூலவர் விமான மஹாஸம்ப்ரோக்ஷணம். |
| காலை 10 .00 மணியளவில் | பரிவார மூர்த்திகள் மஹா ஸம்ப்ரோக்ஷணம் மூலவர் மஹாஸம்ப்ரோக்ஷணம். |
| மதியம் 2.00 மணியளவில் | திருக்கல்யாணம் |
| மாலை 4.00 மணியளவில் | மூலவர் பெருமாள் திருமஞ்சனம், விமான திருமஞ்ஜனம்., இரண்டாம் கால ஹோமம், |
| மாலை 6.00 மணியளவில் | ஸ்ரீ ராதா ருக்மணி ஸமேத ஸ்ரீ கோகுலகிருஷ்ணன் ஸ்வாமி வீதியுலா, |
| அன்னதானம் | |

சிற்ப நூன் கலைஞர் திரு குரு முருகன் ஸ்தபதியார் திருக்கழுக்குன்றம்

இளம் தச்சன் மயன்ராஜ் ஸ்தபதியார்

**Name: SHRI GOKULAKRISHNAN TRUST**

**Bank: BANK OF BARODA**

**C/A NO: 10450200000565**

**IFSC: BARB0CHINGL**

**Branch :Chengleput**

**GPAY : 98415 82962**

**தொடர்புக்கு :**

**94426 31062,81900 82962,96262 11013**

**99400 54752,9840063407.**

**சிறுவர்களுக்கான சிறப்பு அம்சங்கள் பொருந்திய திருக்கோவில்**

**அனைவரும் வருக ஸ்ரீ கோகுலகிருஷ்ணன் ஸ்ரீ ராதா ருக்மணி அருள்மிகு ஸ்மேத திரு அருளைப் பெறுக !!!**

கற்பகவிநாயகர் கார்ட்ஸ், செங்கை. செல் : 9952383929,8807984060